11. அரசினர் தனித் தீர்மானம்

நாடாளுமன்ற மக்களவையிலும் சட்டமன்றப் பேரவைகளிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஆங்கிலோ-இந்தியருக்கு உள்ள இட ஒதுக்கீட்டை மேலும் 10 ஆண்டுகள் நீட்டிக்கும் அரசமைப்புச் சட்டத் திருத்தத்திற்கு ஏற்பளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற 2009 ஆம் ஆண்டு அரசமைப்பு (நூற்று ஒன்பதாவது திருத்தச்) சட்டமுன்வடிவினால் செய்யக் கருதப்பெற்றுள்ள இந்திய அரசமைப்பின் 368-வது பிரிவின் (2) ஆம் பகுதியின், வரம்புரையின் (d) பகுதியின், நிபந்தனையின்கீழ் வரும் திருத்தங்களுக்கு இப்பேரவை ஏற்பளிக்கிறது"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியது. இதனை ஒருமனதாக நிறைவேற்றலாம். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு காவல் சட்டமுன்வடிவு, 2008 மீதான ஆய்வுக் குழு அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையினை நீட்டித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்டமன்றப் பேரவை விதி 156(1)-ஐத் தளர்த்துதல். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS